**O.S.No. 230/2018**

**PW 1: பாப்பாத்தி (எ) ஜெயலட்சுமி** தேதி 10.02.2026

வாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 7 முதல் 11 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

செல்லமுத்து வகையறா 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கிடையே அ.வ.எண் 139/2017 பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்யப்பட்டு 16.12.2017 ல் பாகப்பிரிவினை தீர்ப்பானது என்றால் அது எனக்கு தெரியாது. தாவா பி அட்டவணை சொத்தில் 1 மற்றும் 5 அயிட்ட சொத்துகள் தான் அ.வ.எண் 139/17 ல் வழக்கு சொத்துகள் என்றால் எனக்கு தெரியாது. பி அட்டவணை சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் மொத்தம் 16 ஏக்கர். அ வ எண் 139/17 வழக்கை இந்த வழக்கை தாக்கல் செய்த பின்பு தான் தெரிந்து கொண்டேன். அதற்கு முன்பு தெரியாது. 2018 ல் தெரிந்து கொண்டு இந்த வழக்கை தாக்கல் செய்தேன். அதன்படி மேற்படி வழக்கின் தீர்ப்பின் படி பிரித்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல பொதுவில் தான் உள்ளது. ச எண்.225 காலையில் அ வ எண் 139/17 ன் படி 1ம் பிரதிவாதிக்கு 1.70 ஏக்கர் மேபுறத்தில் பிரிந்தது என்றால் சரியல்ல. 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு கிழபுறத்தில் 1.55 ஏக்கர் பிரித்து கொண்டார்கள் என்றால் சரியல்ல. ச எண் 309 ல் கிழபுறமாக 5.80 ஏக்கர் 2 மற்றும் 3 பிரதிவாதிகள் பிரித்து கொண்டார்கள் என்றால் சரியல்ல. ச எண் 309 ல் 1ம் பிரதிவாதிக்கு மேபுறத்தில் 6.49 ஏக்கர் பிரித்து கொண்டார் என்று சொன்னால் சரியல்ல. என் அப்பாவும் சித்தப்பாவும் 50 வருடத்திற்கு முன்பாக பிரித்து கொண்டார்கள். மேபுறமாக பிரித்து கொண்ட பங்குதாரர் 1ம் பிரதிவாதிக்கு 69 சென்ட் அதிகமாக ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அவர்களுக்கிடையே எப்படி பிரிவினை ஆனது என்று எனக்கு தெரியாது. 5 ம் பிரதிவாதி 2 மற்றும் 3 பிரதிவாதிகளிடம் இருந்து 4.3.2020 ல் ரூ.3,82,000/- க்கு 94 சென்ட் செக்குபந்தி கண்டு ச எண் 309/3**B** வாங்கியிருக்கிறார் என்றால் சரியல்ல அது

எனக்கு தெரியாது. 6 ம் பிரதிவாதி 59 ¾ சென்ட்டை 4.3.2020 ல் ரூ.2,13,000/- வாங்கியிருக்கிறார் என்றால் எனக்கு தெரியாது. அதே தேதியில் 8 ம் பிரதிவாதி 1.98 ¾ ஏக்கரை ரூ.8,02,500/- கிரையம் வாங்கியிருக்கிறார் என்றால் எனக்கு தெரியாது. 9 மற்றும் 10 பிரதிவாதிகள் கூட்டாக அதே தேதியில் 1.05 ½ சென்ட்டை ரூ.4,25,000/- க்கு வாங்கியிருக்கிறார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. அதே தேதியில் 11 ம் பிரதிவாதி 0.73 சென்ட்டை ரூ.2,94,000/- கிரையம் வாங்கியிருக்கிறார் என்றால் அது எனக்கு தெரியாது. 19.12.2020 ல் கம்பளியம்பட்டி பஞ்சாயத்து ரோடு போட பஞ்சாயத்திற்கு தானசெட்டில்மென்ட் எழுதி கொடுத்திருக்கிறார்கள் என்றால் எனக்கு தெரியாது. அது தற்போது பஞ்சாயத்து அனுபவத்தில் உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. ரோடு போட்டிருப்பது தெரியும். ரோடு போட்டு எத்தனை வருடம் இருக்கும் என்றால் 4 – 5 வருடம் இருக்கும். லைட் கம்பம் உள்ளது. 5 ம் பிரதிவாதி ஏற்கனவே கம்பளியம்பட்டி பஞ்சாயத்தில் அனுமதி வாங்கி கட்டிடம் கட்டியிருக்கிறார் என்றால் கட்டிடம் கட்டவில்லை மாட்டு கொட்டகை போல் போட்டுள்ளார். அது தொழிற்சாலை கட்டிடம் என்றால் சரியல்ல. 11 ம் பிரதிவாதியும் கம்பளியம்பட்டி பஞ்சாயத்தில் அனுமதி வாங்கி கட்டிடம் கட்டி அனுபவித்து வருகிறார் என்றால் கட்டிடம் கட்டியிருக்கிறார். கம்பளியம்பட்டி பஞ்சாயத்தில் மின் இணைப்பு பெற்று வரியும் செலுத்தி அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் மின் இணைப்பு மட்டும் வாங்கியிருக்கிறார். பஞ்சாயத்திற்கு வரி கட்டி அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. விற்ற சொத்துகள் அனைத்தும் ச எண் 309 கிழபுறத்தில் உள்ளது என்றால் கிழபுறத்திலும் வடபுறத்திலும் உள்ளது. அ வ எண் 139/17 தீர்ப்பான விவரம் எனக்கு அப்போதே தெரியும் என்றும் அவர்கள் 5 முதல் 11 பிரதிவாதிகளுக்கு விற்ற விவரம் எனக்கு அப்போதே தெரியும் என்றும் வழக்கிற்காக அதை மறைத்து பொய் சாடசியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சொத்தின் விலை கூடி விட்டதால் துர்லாபம் அடையும் எண்ணத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 5 முதல் 11 பிரதிவாதிகள் நல்லெண்ண

கிரையதாரர்கள் என்றும் அவர்கள் செய்த கிரையமும் அ வ எண் 139/17 தீர்ப்பும் என்னை கட்டுப்படுத்தும் என்று சொன்னால் சரியல்ல. 5 முதல் 11 பிரதிவாதிகள் கிரயத்திற்கு பின்னால் உட்பிரிவு செய்து தனித்தனியாக அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. கம்பளியம்பட்டி பஞ்சாயத்திற்கு தானசெட்டில்மென்ட் கொடுத்த ரோடு கம்பளியம்பட்டி பஞ்சாயத்து தலைவர் பேரில் பட்டாவாகி தார் ரோடு அமைத்து பொது மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள் என்று சொன்னால் 4 சென்டில் ரோடு உள்ளது. அது பொது ரோடு என்றால் சரிதான். நான் பொய்யாக வழக்கு தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.